மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 3

ஏப்ரல் 2016

# கல்வியில் தொழில்நுட்பம்









புதிய
அறிவியல்
தொழில்நுட்பங்களுடன்
கற்றிட
வறுமை
தடையாக
வேண்டாமே!










கனவு Communication Address: | Mr. D. Shylet Moni Editor | 27, Wireless Road, Kurunji Nagar West, K.K. Nagar, Trichy - 620 021. Cell: 98400 51900



மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 3

ஏப்ரல் 2016




விளையாட்டு வீரராக,
வீராங்கனையாக மாறிட...
உங்களை அழைக்கிறது
தமிழ்நாடு விளையாடடு
மேம்பாட்டு ஆணையம்



இயற்கை
பேரிடர்களின் போது
மிளிரட்டும்
இளையோர்களின்
ஈடுபாடு



போராடி சிகரம் தொட்ட,
வாழ்வில் சிகரம் தொட துடிக்கும்
பெண்களுக்கு மார்ச்-8
பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்



தனிச்சுற்றுக்கு மட்டும்

நன்கொடை ₹20/-

அன்பு நண்பர்களே, வணக்கம்!



2015-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் பெய்த வரலாறு காணாத கனமழை தமிழகத்தின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களை புரட்டிப் போட்டதை நீங்கள் அறிவீர்கள். கனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் உயிரிழந்தவர்களையும், வீடு, உடமை, சான்றிதழ்கள் இழந்தவர்களையும் இத்தருணத்தில் கரிசனையோடு நினைவு கூறுவோம். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் குறித்து உலகம் முழுவதும் மக்கள் மிகவும் கரிசனையோடு இருக்கின்றார்கள்.

இதுபோன்ற இயற்கை சீற்றங்களை, பேரழிவுகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் நமக்கு இல்லை. ஆனால் இயற்கை பாதிப்புகளிலிலிருந்து மீண்டு வருவதற்கான ஆற்றல்களும் வாய்ப்புகளும் நமக்கு இருக்கின்றது. அது போல ஒவ்வொரு இயற்கை பேரழிவுகளிலிருந்தும் நாம் நிறைய வாழ்க்கைப் பாடங்களை கற்றுக் கொள்ள முடியும்.

இயற்கை ஆபத்துகள் நேரிடும் போது எவ்வாறு உங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் உதவமுடியும் என இளைய தலைவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திப்பது மிகவும் கட்டாயமானதாகும். நம் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. அத்தகைய முயற்சியை முன்னெடுக்கிறபோது நாம் இளைய தலைவர்களாக பிரகாசிக்கிறோம்.

இந்நேரத்தில் என் வாழ்க்கையிலிருந்து ஓர் உதாரணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 2004-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளை சுனாமி புரட்டிப் போட்டபோது நான் கலிபோர்னியாவில் ஒரு பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தேன்.




சுனாமி என்றால் என்ன? நாம் எவ்வாறு உதவலாம்? என்று குழம்பிக் கொண்டிருந்தபோது மிகவும் அருமையான ஓர் எண்ணம் உதயமானது. பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த நாங்கள் சிலர் இணைந்து அரசு பள்ளிக் கூடங்களில் பயின்றுவரும் மாணவர்களை அணுகினோம். அந்த மாணவர்கள் மூலமாக உதவி வேண்டியும், உற்சாகமூட்டும் வார்த்தைகள் எழுதிய ஒரு துணி கொடுத்தனுப்ப வேண்டியும் அவர்கள் குடும்பங்களுக்கு கடிதங்கள் கொடுத்தனுப்பினோம்.

நாங்கள் தொடர்பு கொண்ட 19 பள்ளிகளில் பயிலும் 1000 மாணவர்களின் குடும்பங்கள் தலா 4 டாலர் வீதம் 4,000 டாலர்களும் (இந்திய மதிப்பில் ரூபாய் 2,60,000), ஒரு சதுர அடி வீதம் உற்சாகமூட்டும் வார்த்தைகள் எழுதிய 1,000 சதுர அடி துணிகளும் கொடுத்தனுப்பினர்.

சிறிய ஓர் எண்ணம் மிகப்பெரிய நன்கொடை வசூலிக்க உதவியது. அந்த 1,000 சதுர அடி துணியையும் நாங்கள் ஒன்றாக தைத்து, மிகவும் நீளமான பதாகை ஒன்று உருவாக்கினோம்.

இலங்கையில் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட கால்வீவா (Galwewa) என்னும் இடத்தில் அமைந்துள்ள ஒரு துவக்கப்பள்ளியினை மறு சீரமைத்திட முடிவெடுத்தோம். நாங்கள் திரட்டிய பணம் அப்பள்ளியில் புதிய நூலகம் ஒன்றும், சமூகக் கல்விக்கூடம் ஒன்றும் அமைப்பதற்கும், கிராம பெண்களின் வாழ்வாதார மறு சீரமைப்புக்கும், மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது.




இந்த சிறிய கிராமம் சுனாமியால் நிறைய நபர்களை இழந்துவிட்டது. எங்களின் சிறிய உதவி அக்கிராமத்தை மறுசீரமைத்திட சிறிய அளவில் உதவியது. எங்கள் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிறிய எண்ணம், சிறிய முயற்சி, மகிழ்வான மாற்றங்களை உண்டாக்கியது.

எங்களின் ஈடுபாடு புதிய தொடர்புகளை உருவாக்கிக் கொடுத்தது. அந்த சிறிய கிராமம் சுனாமி ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து மெள்ள மெள்ள மீண்டு வந்ததை எங்கள் கண்களால் பார்த்தும் உணர்ந்தும் மகிழ்ந்தோம்.

சிறிய எண்ணங்கள்தான் மிகப்பெரிய மாற்றங்களுக்கு வித்தாக அமைகின்றது. நீங்களும் உங்கள் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுங்கள். மாற்றத்தின் கருவியாக விளங்குங்கள். உங்கள் எண்ணங்கள் வாயிலாக சமூக மாற்றத்தில் பிறரும் பங்கேற்க உதவுங்கள்.

இயற்கை பேரிடர்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். இது இயற்கையின் நியதி. அத்தகைய நிகழ்வுகள் நிகழும்போது புதிய, சவாலான எண்ணங்களை உருவாக்குங்கள். அந்த எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து மாற்றங்களின் கருவியாக திகழுங்கள்.

இயற்கை பேரிடர்களின்போது

- **தேவைகள் என்ன?**
- **யாரெல்லாம் உதவுகிறார்கள்?**
- **என்ன உதவிகளெல்லாம் செய்யப்படவில்லை?**
- **அரசு, சமூகம், அரசு சாரா நிறுவனங்கள், மக்கள் இயக்கங்கள் அவர்களின் பணிகளைச் செய்கின்றனரா? இல்லையா?**
- **நீங்கள் எவ்வாறு பேரிடர் பாதிப்புகளுக்கு உள்ளான மக்களுக்கு உதவலாம்?**
- **யாரெல்லாம் உங்களுடன் கைகோர்ப்பார்கள்?**
- **எத்தகைய உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை?**

இத்தகைய கேள்விகளை உங்களுக்குள்ளே கேளுங்கள். எண்ணங்கள் பிறக்கும். எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுங்கள். நீங்களும் இளைய தலைவரே!

**மாற்றங்கள் உங்களால் நிகழட்டும்!**




*வாழ்த்துக்களுடன்...*

**கிரேக் பியூ,** MA

**Gregory Buie,** MA
*Visions Executive Director/Co-Founder*

# விளையாட்டில் ஆர்வமா?!



**6.7,8,9,11-ம் வகுப்பு படிக்கப் போகிறீர்களா?**
**அல்லது**
**படித்துக் கொண்டிருக்கீறீர்களா?**
**அல்லது**
**கல்லூரியில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்களா?**

## உங்களை இருகரம் விரித்து அழைக்கின்றது

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்



அரசின் பல்வேறு சிறப்புமிக்கத் திட்டங்கள் கிராமத்தின் கடைக்கோடியில் வசிக்கும் மாணவர்களை, இளைஞர்களை ஏனோ சென்றடைவதில்லை. அறிவியலும் தொழில்நுட்பமும் நாம் வாழும் உலகினை சுருக்கினாலும் தேவையான செய்திகள் பரவலாகப் பகிரப்படுவதில்லை.

தமிழ்நாடு முழுவதும்

- **5 முதன்மை சிறப்பு விளையாட்டு விடுதிகள்**
- **5 விளையாட்டுப் பள்ளிகள்**
- **23 விளையாட்டு விடுதிகள்**

உள்ளன என்று நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்!

நம் தமிழக கிராமங்களில் காலந்தொட்டே பல்வேறு விளையாட்டுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் கிராம மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் தங்களுடைய கிராமம் தாண்டி திறமைகளை வெளிப்படுத்துவதில்லை. விரும்பினாலும் அதற்கான வாய்ப்புகளும் அமைவதில்லை. திறமைகள் கிராமங்களுக்குள்ளோ அல்லது தான் பயிலும் பள்ளிகளுக்குள்ளோ புதைந்து போகின்றது. ஆகவேதான் விளையாட்டில் ஆர்வமும், ஈடுபாடும், தன்முயற்சியும், சாதிக்க வேண்டும் என்கின்ற வேட்கையுமுடைய மாணவ மாணவியர்களை, இளைஞர்களை - மாவட்ட அளவில், மாநில அளவில், இந்திய அளவில், அகில உலக அளவில் சாதிக்க வைப்பதற்காக - தமிழக அரசு தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு பள்ளிகளையும், விளையாட்டு விடுதிகளையும் அமைத்து, திறமையான விளையாட்டு பயிற்றுநர்களைக் கொண்டு முறையான பயிற்சிகள் வழங்கியும், போட்டிகளில் பங்கேற்க வாய்ப்புகள் நல்கியும் வருகின்றது என்கிறார் திருச்சி விளையாட்டு விடுதியின் மேலாளர் திரு.செ. அருணா அவர்கள்.

விளையாட்டு விடுதியில் பயின்று விளையாட்டிலும் கல்வியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியதினால் மட்டுமே தான் விளையாட்டு விடுதி மேலாளர் நிலைக்கு உயர்ந்துள்ளதாக பெருமைப்பட்டுக் கொள்கின்றார் அவர்.

**திருமிகு செ. அருணா** அவர்கள் நம் கனவு இதழுக்கு அளித்த பிரத்தியேக பேட்டி இதோ!

### தமிழகத்தில் விளையாட்டு விடுதிகள் எங்கெங்கே உள்ளன?

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** - மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், என்.எல்.சி. பள்ளி–நெய்வேலி, அரசு மேல்நிலைப்பள்ளி – புதூர், சென்னை, செல்வம் மேல்நிலைப்பள்ளி–நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி** – ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், நாகர்கோயில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, நேரு உள் விளையாட்டரங்கம் – சென்னை, பாரதி வித்யா பவன் – திண்டுக்கல்– ஈரோடு, செல்வம் மேல்நிலைப்பள்ளி–நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

## விளையாட்டில் சேர்வதற்கான தகுதிகள் என்ன?

**முதல் தகுதி** – விளையாட்டில் ஆர்வமும், ஈடுபாடும், சாதிக்க வேண்டும் என்கின்ற துடிப்பும்.

**இரண்டாவது** ☆ விளையாட்டு விடுதிகளில் சேர விருப்பம் உடையவர்கள் 7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்புகளில் படிப்பவராக அல்லது படிக்க இருப்பவராக இருக்க வேண்டும்.

☆ முதன்மை சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கு 6-ம் வகுப்பு, 7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்புகளில் படிப்பவராக அல்லது படிக்க இருப்பவராக இருக்க வேண்டும்.

☆ +2 முடித்தவர்கள், தோற்றவர்கள், கல்லூரி படிப்பவர்கள் சென்னையில் உள்ள **Sports Hostel for Excellance** விடுதியில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.


## விளையாட்டு விடுதிகளில் வழங்கப்படும் பயிற்சிகள் என்னென்ன?

**மாணவர்**– 1. தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கிரிக்கெட், 6. கால்பந்து, 7. வாள்சண்டை, 8. ஜிம்னாஸ்டிக்ஸ், 9. கைப்பந்து, 10. ஹாக்கி, 11. நீச்சல், 12. டேக்வோண்டோ, 13. வாலிபால், 14. பளுதூக்குதல், 15. கபாடி, 16. துப்பாக்கி சுடுதல். 17. மேசைப்பந்து, 18. டென்னிஸ், 19. ஜீடோ, 20. ஸ்குவாஷ், 21. கடற்கரை கையுந்து பந்து மற்றும் 22. வில்வித்தை.

**மாணவியர்**– 1. தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கால்பந்து, 6. வாள்சண்டை, 7.ஜிம்னாஸ்டிக்ஸ், 8. கைப்பந்து, 9. ஹாக்கி, 10. நீச்சல், 11. டேக்வோண்டோ, 12. வாலிபால், 13. பளுதூக்குதல், 14. கபாடி, 15. துப்பாக்கி சுடுதல், 16. மேசைப்பந்து, 17. டென்னிஸ், 18. ஜுடோ, 19. ஸ்குவாஷ், 20. கடற்கரை கையுந்து பந்து மற்றும் 21. வில்வித்தை.

## விளையாட்டு விடுதிகளில் சேர்ந்திட எப்படி, எங்கு, எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவ / மாணவியர் 2016-2017ஆம் ஆண்டு சேர்க்கைக்கு உரிய படிவங்களை வருகின்ற மார்ச் 10-ஆம் தேதி முதல் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்கள் அல்லது விடுதி மேலாளர்களை அணுகி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது **www.sdat.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் பதவிறக்கம் செய்து கொள்ளலாம். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டு விடுதிகள் தொடர்பான விவரங்களை **www.sdat.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் தெரிந்துக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அந்தந்த மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர்களிடம் வருகின்ற 20.04.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. பிரீப் யாதவ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.



7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வு வரும் 25.04.2016 அன்று தொடங்கி 30.04.2016 வரை நடைபெற உள்ளது.

## விளையாட்டு விடுதிகளில் சேர்ந்து பயில எவ்வளவு செலவாகும்? விடுதிகளில் வசதிகள் எவ்வாறு உள்ளன?

தமிழக அரசு அத்தனை செலவுகளையும் தானே ஏற்றுக் கொள்கின்றது. விடுதிகளில் உணவு தரமானதாகவும், ஆண், பெண் விளையாட்டு வீரர்களுக்குத் தனித்தனியே, மிகவும் பாதுகாப்பான விளையாட்டு விடுதிகள் உள்ளன.

விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க திறமையும், அனுபவமும் உள்ள பயிற்சியாளர்களை அரசு நியமித்துள்ளது.

## விடுதிகளில் சேர்ந்திட தேர்வுகள் மாவட்ட அளவில் மட்டும்தான் நடக்குமா?

இல்லை, தேர்வுகள் இருகட்டமாக அமையும்.

**மாவட்ட அளவில்...** விளையாட்டு விடுதிகளில் சேர விரும்பும் மாணவ மாணவியர்களுக்கு கீழ்காணும் தேர்வுகள் நடைபெறும்.

- ★ **உயரம்** (Height)
- ★ **எடை** (Weight)
- ★ **தாங்கும் திறன்** (Endurance)
- ★ **உடல் வலிமை** (Strength)
- ★ **வேகம்** (Speed)
- ★ **விளையாட்டு நுட்பங்கள்** (Technique)
- ★ **சுறுசுறுப்பு** (Agility)

இவைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு **மாநில அளவில்** அவர்கள் தேர்ந்தெடுக்கும் விளையாட்டுகளில் தேர்வுகள் நடைபெறும்.

### இட ஒதுக்கீடுகள் உண்டா?

இடஒதுக்கீடு என்று ஏதுமில்லை. மாறாக, மண்டல, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

### விளையாட்டு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் எவ்வாறு உள்ளன?

மிகவும் பிரகாசமாக உள்ளது. கல்லூரிகளில் இருக்கும் **Sports Quota**-வின் மூலம் மிக எளிதாக இடம் பிடித்து விடலாம். அதுபோல காவல்துறை, இரயில்வே, சுங்க இலாகா போன்ற துறைகளிலும் விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை உண்டு.

### விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கு பிரத்யேகமான விதிமுறைகள் வேறேதும் உள்ளதா?

குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால் உயரமானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| வகுப்பு | மாணவர் | மாணவியர் |
|---|---|---|
| 7-ம் வகுப்பு | 165 செ.மீ. | 158 செ.மீ. |
| 8-ம் வகுப்பு | 170 செ.மீ. | 160 செ.மீ. |
| 9-ம் வகுப்பு | 175 செ.மீ. | 165 செ.மீ. |
| 11-ம் வகுப்பு | 185 செ.மீ. | 175 செ.மீ. |

- ☆ கல்வி சம்பந்தமான கட்டணங்களை பெற்றோர் ஏற்க வேண்டும்.
- ☆ உணவு, தங்குமிடம், விளையாட்டுச் சீருடை, விளையாட்டுப் பயிற்சி ஆகியவை இலவசமாக வழங்கப்படும். உணவிற்காக அரசு நாள் ஒன்றுக்கு ரூ. 250/- ஒதுக்கீடு செய்கிறது.
- ☆ எந்த காரணத்தாலும் இடையில் வெளியேறினால் நாள் ஒன்றுக்கு ரூ. 250/- வீதம் திரும்ப செலுத்த வேண்டும்.
- ☆ கலந்தாய்வு முறையில் இட ஒதுக்கீடு செய்யப்படும்.

*பேட்டியின்போது கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் சற்றும் சளைக்காமல் விளையாட்டு வீரருக்கான துடிப்புடனே பதிலளித்தார் திரு. செ. அருணா அவர்கள்.*

*கிராமத்தில் இருக்கும் திறமையான மாணவ மாணவியர்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற ஆவல் திரு. செ. அருணா அவர்கள் கண்களில் மின்னியதை என்னால் பார்க்கவும் உணரவும் முடிந்தது.*

நேர்காணல் - **தே. சைலட் மோனி**



## சிந்திக்கத் தூண்டும் சிறப்பான பழமொழிகள்

- கொக்கு தலையில் வெண்ணெய் வெச்சமாதிரி.
- மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.
- சுண்டக்கா கால் பணம், சுமைக்கூலி முக்கா பணம்.
- மலைய சொல்லி எலிய புடிச்சானாம்.
- அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே
- நுனிநாக்கு தேயரதுக்கு குதிகால் தேயலாம்.
- அண்டமே சுமக்கரவனுக்கு சுண்டை ஒரு பாரமா?
- நடந்த கால் ஸ்ரீதேவி, இருந்த கால் மூதேவி.
- சிங்கம் இளைச்சா எலி மச்சான் முறை கொண்டாடுமாம்.
- ஏறச் சொன்னால் எருது கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக் கோபம்.

**இப்பழமொழிகள் சொல்லும் தத்துவத்தை சரியாக வாழ்க்கை உதாரணங்களுடன் எழுதி அனுப்பும் முதல் மூன்று நபர்களுக்கு தலா ரூ. 500 பரிசாக வழங்கப்படும்.**



## கனவு

பத்திரிக்கை வாங்குவதற்காக வாரம் 1 ரூபாய் என இளையோர்கள் சேர்த்து வருகின்றனர்.

**பத்திரிக்கை வாங்குவதற்காக 1 ரூபாய் உண்டியலில் இடும் மாணவி**

தலைவர்களை அறிந்து கொள்வோம்

# தும்பைப்பட்டி தூயவன்

# கக்கன்



திருமிகு. கக்கன் அவர்கள் ஜூன் 18. 1908-ம் ஆண்டு மதராஜ் இராஜதானியாக தமிழகம் இருந்த பொழுது மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திலுள்ள தும்பைப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு தலித் குடும்பத்தில் பிறந்தார். இவரின் தந்தை பூசாரி கக்கன் அவர்கள் கிராம கோயில் அர்ச்சகராக (பூசாரியாக) பணிபுரிந்தவர். தொடக்கக் கல்வியை மேலூரில் பயின்ற அவர் திருமங்கலம் அரசு மாணவர் விடுதியில் தங்கி பி.கே.என். ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை படித்தார்.

அப்பழுக்கற்ற அரசியல்வாதி, காந்தியவாதி, காங்கிரஸ்காரர். பக்தவச்சலம் அமைச்சரவையில் 10 ஆண்டுகள் பணியாற்றிவர். ஐந்தாண்டு லோக்சபா உறுப்பினராகவும் இருந்தார். எனினும் குடியிருக்க வீடில்லாமல் வாடகை வீட்டில் வாழ்ந்தார். அரசு பேருந்தில் பயணம் செய்தார். அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அவரது கடைசி காலம் கழிந்தது.

பொதுவாழ்வில் தூய்மையும், நேர்மையும், செயல்திறனும் கொண்டு அரசுப் பணியை மக்கள் பணியாக நேர்த்தியாக செய்தவர். அமைச்சரானதும் மதுரை மாவட்டத்தில் கிராமங்கள்தோறும் ஓராசிரியர் பள்ளியை நிறுவ முதல் உத்தரவை பிறப்பித்தார். மதுரையின் பெருமைகளில் ஒன்றான விவசாயக் கல்லூரி அமையக் காரணமானவர். ஊழலற்ற, நேர்மையான, தலையீடுகள் இல்லாத நிர்வாகத்திற்கு உதாரணமாக திகழ்ந்த கக்கன் அவர்கள் இன்று நம் கனவு அரசியல்வாதி. மக்கள் சேவைக்கு வருபவர்கள் இவர்போல் இருக்கமாட்டார்களா என்று நாம் ஏங்க வேண்டி உள்ளது.

கக்கனின் பொதுவாழ்வு தூய்மையை அறிந்திட அகில இந்திய வானொலி நிலைய முன்னாள் இயக்குநர் இளசை சுந்தரம் எழுதிய தியாகசீலர் கக்கன் என்ற புத்தகத்தில் இருந்து சில...

## தங்கப் பேனா தகுதிக்கு மீறியது

ஒருமுறை மலேசிய அமைச்சர் கக்கனை சந்தித்தார். கக்கன் வைத்திருந்த பழமையான பேனாவை பார்த்துவிட்டு, தனது பேனாவை அவர் தந்தார். அந்தத் தங்கப்பேனாவை வாங்க மறுத்த கக்கன், அந்தத் தகுதி எனக்கு இல்லை என்றார். எனினும் விடாப்பிடியாக அவர் தர, வேறுவழி இல்லாமல் பெற்றுக்கொண்ட கக்கன், தன் ஊழியரை அழைத்து அதனை அலுவலக புத்தகத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்தார். இது அரசுக்கு அல்ல, உங்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்குத்தான் தந்தேன் என்றார் மலேசிய அமைச்சர் கூறியும் கக்கன் கேட்கவில்லை. நான் அமைச்சராக இல்லை என்றால் இந்தத் தங்கப் பேனாவை தந்திருப்பீர்களா? மக்களுக்கு தொண்டாற்ற பொறுப்பேற்றுள்ள நம்மைப் போன்றவர்கள் பரிசுப் பொருட்களை சொந்த பயன்பாட்டிற்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்றார் கக்கன். உங்கள் சொந்த பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ளாமல், அரசுப் பொருட்களோடு சேர்ப்பதாக இருந்தால் தரமாட்டேன் என அந்த அமைச்சர் கூற, நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று தங்கப் பேனாவை திருப்பி தந்துவிட்டார் கக்கன். கறைபடாத கரத்திற்கு சொந்தக்காரர் கக்கன் என்பதற்கு இந்த சம்பவம் சிறு உதாரணம்.

## மனைவி என்றாலும்...

ஒரு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு கக்கன் வீடு திரும்பும்போது அவரது வீட்டிற்கு அரசு ஊழியர் ஒருவர் மண்ணெண்ணெய் வாங்கி வருவதைக் கண்டார். யார் வாங்கி வரச் சொன்னது என்று கக்கன் கேட்க, அம்மாதான் (கக்கனின் மனைவி) வாங்கி வரச் சொன்னார் என்று ஊழியர் கூற, மனைவியை அழைத்து அவர்கள் முன்னிலையில் சத்தமிட்டார். இவர் யார் தெரியுமா? அரசு ஊழியர். எனக்கு ஊழியம் செய்பவர் அல்ல என்று திட்டித் தீர்க்க, கண்ணீர் மல்க நின்றார் கக்கனின் மனைவி. அதோ ரோட்டில் மண்ணெண்ணெய் கேன் உள்ளது. நீயே வீட்டிற்கு எடுத்துப்போ என்றார். அரசு ஊழியர்கள் அரசுப் பணியை மட்டுமே செய்யவேண்டும் என்பது கக்கனின் கருத்து.

## அரசு உண்டியலில் அம்மா நகை...

கக்கனின் மூத்த மகன் பத்மநாபனின் மகள் தீயணைப்புத் துறையின் முதல் பெண் அலுவலர். வடமேற்கு மண்டல துணை இயக்குனர் மீனாட்சி விஜயகுமார் அவர்கள் தன் தாத்தாவைப் பற்றி

கூறுகிறார். என் அம்மா கிருஷ்ணகுமாரி, ஐ.ஏ.எஸ். அதிகாரி சுப்பையாவின் மகள். எங்கள் அப்பாவிற்கு அம்மாவை திருமணம் செய்ய முடிவு செய்த காலகட்டம் அது. தாத்தா கக்கன் அம்மாவின் அப்பாவை அழைத்து, அமைச்சர் வீட்டில் சம்பந்தம் செய்யப் போகிறோம் என கடன்பட்டுவிடாதே. பெண்ணை மட்டும் அனுப்பினால் போதும் எனக் கூறிவிட்டார். ரொம்ப எளிமையாக வாழ்ந்த தாத்தா, நேர்மை, ஒழுக்கம், அன்பை இறுதிவரை பேணியவர். அமைச்சரான பிறகும்கூட அவர் இரண்டு வேட்டிகள், இரண்டு சட்டைகள் மட்டுமே வைத்திருந்தார். மறுநாள் அரசு விழா என்றால் முதல்நாள் இரவு ஒரு சட்டை, வேஷ்டியை துவைத்து காயவைப்பார். அரசப் பணம் வீணாகக் கூடாது என்று இறுதி வரை செயல்பட்டார். அவர் அரசு வீட்டில் இருந்தால், அவரது அறையில் மட்டும்தான் விளக்கு எரியும். போர் நடந்தபோது, மறைந்த பிரதமர் நேரு அழைப்பின் பேரில் என் அம்மா உட்பட வீட்டுப் பெண்களுடைய வளையல், செயின் போன்ற நகைகள் எல்லாவற்றையும் வாங்கி தாத்தா அரசு உண்டியலில் போட்டுவிட்டார்.

1966-ல் அவர் மாம்பலத்தில் அரசு வீட்டில் வாடகைக்கு குடியிருந்த போது, ஒருமுறை அரசு பஸ்ஸில் பயணித்துள்ளார். அவர் செல்லவேண்டிய இடத்திற்கு அவரிடம் போதிய காசு இல்லை. அவரை தெரிந்து கொண்ட கண்டக்டரும், இருக்கிறதை கொடுங்க எனக் கூறியுள்ளார். ஆனால் தாத்தா தன்னிடமிருந்த காசை கொடுத்துவிட்டு, அதற்கான ஸ்டாப் வந்ததும் இறங்கி நடந்து சென்றுள்ளார். திருமிகு. கக்கன் அவர்களது பேத்தி என்பதில் எனக்குப் பெருமையே என்றார்.

**இவரல்லவா தலைவர்!**

நன்றி: இணையதளம்

# பாராட்டுவோம்




**நல்ல மனிதர்கள் நல்ல விஷயங்களை பாரட்டத் தவறுவதில்லை.**

நல்லதைப் பாரட்டி நல்லது புரிபவர்கள் தலைவர்கள். அழகானந்தல் ஊராட்சி மன்றத் தலைவர் **பி. ரவி** அவர்கள் அவ்வூரில் செயல்படும் மாலை நேரக் கல்வி மையத்திற்கு கரும்பலகை ஒன்றினையும், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பேனாக்களையும் அளித்துள்ளார்கள்.

ஆ.லு.தி. பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் விஷன் நிறுவனத்தால் நடத்தப்படும் 24 மாலை நேரக் கல்வி மையங்களில் ஒன்று இந்த அழகானந்தல் மையம். இந்நிலையத்தை சிறப்பாக வழிநடத்தி வரும் திருமதி. ஆதியாவையும் அவருக்கு உதவியாக இருக்கும் அவரது கணவரையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

**தொடரட்டும் உங்கள் தன்னலமற்ற பணிகள்.**



**உங்கள்**
**கிராமங்களில், நகரங்களில், பள்ளிகளில்**
**நடைபெறும் இத்தகைய நிகழ்வுகளை**
**கனவு மூலமாக உலகுக்கு தெரிவியுங்கள்**
**தலைமைப் பண்புகள் வெளிப்படட்டும்**



## இயற்கை பேரிடர்களிலிருந்து...

# கற்போம் கற்பிப்போம்

நாம் தினசரி காலை எழுந்ததில் இருந்து இரவு தூங்கப் போகும்வரை நமது வாழ்க்கைக்கு அவசியத் தேவையாகக் கருதி பலவற்றை பார்த்துப் பார்த்து செய்கின்றோம். அதோடு எதிர்காலத்திற்கென சேமித்து வைக்கவும் கற்றுக் கொண்டுள்ளோம். நமது தினசரி செயல்பாடுகள் நமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை உறுதி செய்வதற்காக என்று கருதினாலும், பெரும்பாலும் வசதிகளைப் பெருக்குவதாகவே உள்ளன. நமது ஆசைகளை ஒட்டிய பொருட்களோடு தொடர்புடையதாகவே உள்ளது.

வீடு, வாகனங்கள், நிலங்கள், தங்கம், புதிய அதி நவீன தொழில்நுட்பங்கள் உள்ளடக்கிய பொருட்கள், உதாரணத்திற்கு கம்ப்யூட்டர், ஆன்ட்ராய்டு போன்கள் என நவீன, அதாவது ஹைடெக் சமூகமாக மாறிக்கொண்டிருக்கும் நாம், நமது அன்றாட வாழ்க்கையின் அறிவியலையும், அடிப்படையான இயற்கையையும் அவ்வளவாக தெரிந்து கொள்வதற்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. இதன் வெளிப்பாடுகளே நாம் இன்று எதிர்கொண்டிருக்கும் இயற்கை சீற்றங்களும் பேரிடர்களும்.

பேரிடர்கள் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள். மோசமான காலநிலை, பருவநிலை மாற்றங்கள், நிலநடுக்கம், வெள்ளம், புயல் மற்றும் தீ எனப் பல பரிமானங்களில் இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றது. இது தவிர மனிதர்களின் போர்கள், பயங்கரவாத செயல்பாடுகளின் மூலமாகவும் பேரிடர்கள் உருவாக்கப்படுகின்றன. குறிப்பாக இயற்கையாக ஏற்படுகின்ற பேரிடர்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம், எரிமலை சீற்றங்கள் போன்றவைகள் எந்தப் புவி எல்லைகளையோ, தேச எல்லைகளையோ பார்ப்பதில்லை. இந்த இயற்கை மாற்றங்கள் பூமியின் எந்தப் பகுதியிலும் இயற்கை சீற்றங்களாக வெளிப்படலாம். பூமியின்எந்தப் பகுதியின் மக்களையும் பாதிக்கலாம். இது வளர்ந்த நாடுகள், வளர்கின்ற நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகள் என்றோ, மக்களின் மதம், சாதி, மொழி, இனம், ஏழைகள், பணக்காரர்கள் என்றோ எந்தவித வித்தியாசமும் பார்ப்பதில்லை.

இதற்கு அமெரிக்காவில் ஏற்பட்ட கெத்தரீனா, அரிக்கேன் பேரிடர்களும், நமது நாட்டில் குறிப்பாக, நம் தமிழகம் சந்தித்த சுனாமி, தானே புயல், கடந்த நான்கு மாதங்களுக்கு முன் நவம்பர், டிசம்பர் 2015-ல் ஏற்பட்ட வெள்ளமும் சமீபத்திய சாட்சிகளாகும்.

### காரணங்களும் விளைவுகளும்

பல நூற்றாண்டுகளாக இயற்கை நேர்த்தியாக தன்னைத்தானே சமன்படுத்திக் கொண்டு, மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து வளங்களையும் நமக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாமோ அந்த வளங்களை அன்றாட வாழ்க்கையின் தேவைகளையொட்டி பயன்படுத்தாமல், வளர்ச்சி, முன்னேற்றம், நாகரீகம் என்ற பெயரில் இயற்கை சமன்நிலையை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றோம். இயற்கை வளங்களை குறிப்பாக, காடுகள், மலைகள், சமவெளிகள், ஆறுகள், கனித வளங்கள் (நிலக்கரி, தாது பொருட்கள், மணல்) போன்றவற்றை மனித சமூக வாழ்வியல் தேவைகளுக்காக, பயன்பாட்டு ரீதியான வளர்ச்சிக்காக மட்டும் பயன்படுத்தாமல், கொள்ளை லாப நோக்கங்களுக்காக, அளவுக்கு அதிகமாகச் சுரண்டுவதும், சூரையாடுவதுமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மேலும் இன்றைய பேரிடர்களுக்கு பருவநிலை மாற்றமும், தனி மனிதர்களின் பொறுப்பற்ற செயல்பாடுகளும் காரணமாகச் சொல்லப்படுகின்றன. தனிமனிதர்கள் தங்களின் சொகுசு வாழ்க்கைப் பயன் பாட்டிற்காகவும், அளவுக்கு அதிகமாக லாப நோக்கிற்காகவும்,

இயற்கை சமன்நிலையை சீர்குலைக்கின்ற போது சமூகத்தின் அனைத்து கூறுகளும் ஆபத்துக்குள்ளாக்கப் படுகின்றன. மிக எளிதாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், தமிழகத்தின் மழை வெள்ளம் தமிழகத்தின் வளர்ச்சியை தலைகீழாய் புரட்டிப் போட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். தனி மனிதர்கள், குடும்பங்கள் தங்களின் வாழ்க்கையின் அடிப்படைப் பிடிமானங்களை இழந்து தவிக்கின்றனர். வளர்ச்சியின் அடையாளங்களாய்ச் சொல்லப் படுகின்ற தொழில் நிறுவனங்கள், மேம்படுத்தப்பட்ட சாலைகள், பாலங்கள், போக்குவரத்து, தொலை தொடர்பு சாதனங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. பலநூறு கோடி ரூபாய் மதிப்பிலான சேதங்களை இந்தப் பேரிடர் ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்த சமூகத்திற்கும் இப்பேரிடர்கள் பலநிலைகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தாலும், இதன் பாதிப்புக்கு அதிகமாக உள்ளானவர்கள் பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் வசதிகளற்ற ஏழைகள். அதிலும் குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களுடைய வாழ்வாதாரத் தேவைகளுக்காக மிக நெருக்கமாக இயற்கையைச் சார்ந்திருக்கும் பெண்கள், இதுபோன்ற பேரிடர்களால் மிக அதிக அளவிலான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். பெண்களும் குழந்தைகளும் பெரும்பாலான நேரங்கள் வீட்டிலேயே இருப்பதாலும், வீடு சார்ந்த வேலைகளிலேயே இருப்பதாலும் பேரிடர் பாதிப்புகளுக்கு உடனடியாக இரையாகின்றனர். மேலும் இவர்கள் சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளில் பங்கேற்பதிலிருந்தும், அறிவு சார்ந்த தகவல் பரிமாற்றங்களில் இருந்தும் பெரும்பாலும் விலக்கி / ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதால் பேரிடர் பற்றிய தகவல்களையோ, தற்காப்பு முறைகளையோ இவர்கள் அறியாமல் இருக்கின்றனர். அதனால் பாதிப்புகள் இவர்களுக்கே அதிகமாக உள்ளது.




## பேரிடர்களில் இளையோரின் பங்கு

பேரிடர்களினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்களையும், சமூக இழப்புகளையும் மீட்பதற்கு பல்முனை முயற்சிகள் அவசியமாகும். மேலும் இம்முயற்சிகளுக்கு இருவிதமான அணுகுமுறைகள் தேவையாக உள்ளது. உடனடித் தேவைகளான மீட்பு, உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம், தண்ணீர், மருந்துகள் போன்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான அணுகுமறை. இது பெண்கள், குழந்தைகள், வளர்பருவத்தினர், மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் ஆகியோரின் சிறப்புத் தேவைகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்தப்பட வேண்டியதாகும்.

மற்றொன்று நிரந்தர இருப்பிடம், வேலைவாய்ப்பு, இழந்த அடிப்படைக் கட்டமைப்புகள், பள்ளிகள், மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சாலைகள் போன்ற நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அணுகுமுறையாகும். இந்த இரண்டு அணுகுமுறையுமே மக்கள், தன்னார்வலர்கள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் என அனைவரின் கூட்டு முயற்சிகளாலேயே சாத்தியப் படுத்த முடியும்.

சமீபத்தில், தமிழக மழை வெள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் பொதுமக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானதாக இருந்தது. குறிப்பாக பாதிக்கப் பட்டவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டு இருந்தவர்களில் மிக அதிகமானவர்கள் இளையோர்கள். கிராமம் - நகரம், ஏழை - பணக்காரர், ஆண் - பெண், சாதி-மதம்-மொழி-இனம் இவற்றிற்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மனிதம் என்ற மையப்புள்ளியில் இணைந்து இரவு-பகல் பாராமல், ஓயாமல் மீட்புப் பணிகளைச் செய்வதிலும், நிவாரணப் பொருட்களை திரட்டுவதிலும், விநியோகிப்பதிலும் இளையோரின் பங்கு மிகவும் பாராட்டுக்குறியதாக இருந்தது. அவர்களின் சமூக அக்கறை இளையோரை அகில உலக அளவில் அதிகம் பெற்றிருக்கும் இந்தியாவிற்கு நம்பிக்கை அளித்திருக்கிறது.

மேலும் இன்றைய இளையோர்கள் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்பாட்டு அறிவோடு இயங்குவது என்பது கூடுதல் சிறப்பாகும். வெள்ள நிவாரணப் பணியில் சமூக வலைத்தளங்களான முகநூல், வாட்ஸ்-அப், டிவிட்டர் போன்ற இணைய

தளங்களின் மூலம் உலகையே ஒன்றிணைத்தனர். இளையோரின் இத்தகைய முயற்சிகளும், ஈடுபாடும் அவர்களின் சமூக அக்கறையையும், தலைமைத்துவ பண்புகளையும் வெளிக்கொணர்ந்து உள்ளது. அதே நேரத்தில் இத்தகைய சமூக அக்கறையுள்ள இளைஞர்கள் தொடர்ந்து உயிர்ப்புடன் செயலாற்ற பாதை அமைத்துத் தருவதும் காலத்தின் கட்டாயமாகும்.



பேரிடர் பாதிப்பு சூழல்களில் அதிக அளவில் இளையோர்கள் ஈடுபட்டு இருந்தாலும், பெரும்பான்மையான இளையோர்கள் பயிற்சி ஏதுமின்றி பார்வையாளர்களாகவும், பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்ற நிலைமையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இளைஞர்களை எதிர்பாரமல் எப்போது வேண்டுமானாலும் ஏற்படுகின்ற இயற்கைப் பேரிடர்களை, மனிதர்களால் ஏற்படக்கூடிய பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமை மிக்கவர்களாக மாற்றப்பட வேண்டும். இளையோர்களை பேரிடர் மேலாண்மையில் ஆளுமை மிக்கவர்களாக மாற்ற பின்வருபவைகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

- **பள்ளி, கல்லூரி சார்ந்த மற்றும் சாராத அனைத்து இளையோர்களுக்கும் பேரிடர் பற்றியும், அதன் மேலாண்மை பற்றியும் அடிப்படைக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அது தொடர்புடைய தகவல் விளக்கக் கையேடுகள், விளக்கப் படங்கள், குறும்படங்கள், ஆவணப் படங்கள் அந்தந்த பிராந்திய மொழிகளில் தயாரிக்கப்பட வேண்டும்.**

- **பள்ளி, கல்லூரி மற்றும் கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை சமூக தன்னார்வக் குழுக்கள் அமைத்து தொடர் பயிற்சிகள், விவாதங்கள், பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

- **இளையோர்களை தங்களது வசிப்பிடங்களை மையமாகக் கொண்ட கிராமம் மற்றும் நகர்புறங்களில் பேரிடர் மேலாண்மை மற்றும் தற்காப்பு வரைபடங்களை தயாரிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்.**

- **தங்கள் வசிப்பிடப் பகுதிகளில் உள்ள பேரிடர் ஆபத்தின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட சாத்தியமுள்ள இடங்களை அடையாளம் கண்டறிந்து, அப்பகுதிகளில் தொடர் விழிப்புணர்வு, மேலாண்மைக் கல்வி அளிக்க வேண்டும்.**

- **பேரிடர் மேலாண்மையில் உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சிகளின்பங்கு பற்றிய தகவல்களை அனைவரும் அறிந்து வைத்திருக்கும் வண்ணம் விளம்பரம் மற்றும் அறிவிப்புப் பலகைகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் முயற்சியில் இளையோர்கள் ஈடுபட வேண்டும்.**

- **இளையோரை உள்ளடக்கிய கிராமப்புற பேரிடர் மேலாண்மை கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து செயல்படுத்த வேண்டும்.**

- **பேரிடர் மேலாண்மைக்கான தொடர் செயல்பாட்டிற்கான புதிய செயலிகள் உருவாக்கப்பட்டு பரவலாக்கம் செய்யப்பட வேண்டும்.**


- **சமூக வலைதளங்களை முழுமையாக, சரியாக பயன்படுத்த பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.**

- **பேரிடர்களை குறைப்பதற்கான, தடுப்பதற்கான அவசியம் பற்றிய வகுப்புகள் மற்றும் பயிற்சிகள் இளையோருக்கு அளிக்கப்பட வேண்டும்.**

- **அன்றாடம் வானிலை ஆய்வு மையம் மூலம் பருவநிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும், பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும்சமூக வானொலிகள், குறுந்தகவல்கள் மூலம் அனைத்து மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.**

பேரிடர் ஏற்படும் காலங்களில் மட்டும் அல்லாமல் வரும்முன் காப்போம் என்ற அறிவியல் அடிப்படையில் தொடர்ந்து இளையோரை பேரிடர் மேலாண்மை தொடர்புடைய முயற்சிகளிலும், பயிற்சிகளிலும் தொடர்ந்து இணைப்பதன் மூலமே நிரந்தரமான தீர்வுகளை எட்டுவதற்கும், சமூக மாற்றத்திற்கு இளையோரின் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கும் உதவிடும். இளையோருக்கு இத்தகைய தொடர் பணிகள் தன்னம்பிக்கையோடு செயல்படக்கூடிய உயிர்ப்பினையும், படிப்பினையும் கற்றுத் தரும்.

**Dr. S. Suba**
***Asst. Professor,***
Dept of Women's Studies,
Bharathidasan University,
Trichy.



# உணவே மருந்து

பல்வேறு தகவல்கள் ஒரு கிளிக்கில் நமக்கு கிடைத்து விடுகின்றன. விளம்பரங்களில் பல நம்மையறியாமலேயே நம்மை படுகுழியில் தள்ளி விடுகின்றன.

உணவுகளைக் குறித்து வெளிவரும் விளம்பரங்கள், பிரசுரங்கள் நம்முடைய ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றது என்பது நெருடலான நிஜம்.

நம்முடைய உணவு மூன்று முக்கிய அங்கங்களைக் (Components) கொண்டுள்ளது.

1) மாவு (Carbohydrate)

2) கொழுப்பு (Fat)

3) புரதம் (Protein)

மற்றும் வைட்டமின்கள், கனிமங்கள், நீர்.

நமது உடலுக்குத் தேவையான ஆற்றல் பெருமளவு மாவுச் சத்திலிருந்து கிடைக்கின்றது. உடல் கொழுப்பையும் உடல் வலிமைக்கு பயன்படுத்துகின்றது. உடல் பயன்படுத்தாத மாவுச் சத்தும், கொழுப்புச் சத்தும் கொழுப்பாக நம் உடலில் சேமித்து வைக்கப்படுகின்றது. புரதம் நம்முடைய உடலின் தசைப் பிடிப்பிற்கு உதவுகின்றது.

**மாவுச் சத்து** அரிசி, கோதுமை, ஓட்ஸ், உருளைக்கிழங்கு போன்றவைகளிலிருந்தும்,

**கொழுப்புச் சத்து** எண்ணெய், நெய், வெண்ணெய், பால், பால் பொருட்கள் போன்றவைகளிலிருந்தும்,

**புரதச்சத்து** இறைச்சி, பால், பீன்ஸ், வீட்டு பாலாடைக் கட்டி போன்றவைகளிலிருந்தும் கிடைக்கின்றன.

**ஆரோக்கியமான உணவருந்துதல்** என்பது


**பயனற்ற உணவுகள் (Junk Foods)** (உ-ம்) பீட்சா, கட்லெட், எண்ணெயில் பொறித்த உணவுகள்

**கார்பனேட்டட் பானங்கள்** (உ-ம்) கொக்கோகோலா, பெப்சி போன்றவை

**துரித உணவுகள் (Fast foods)** (உ-ம்) பிரைடு ரைஸ், நூடுல்ஸ் போன்றவை.

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து.**

முன் உண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைபிடித்து அவற்றையும் பசித்த பிறகு உண்ண வேண்டும்.




என்னப்பா இது? வேறு என்ன சாப்பிடுவது என்று கேட்கிறீர்களா?

எத்தனை விதமான பாரம்பரிய உணவு வகைகள் இருந்தன தெரியுமா? அவைகள் எல்லாம் நமக்கு மறந்து போயின. அவைகளை சமைப்பதற்கு நேரமும் நமக்கில்லை.

கொழுக்கட்டையை அவித்து அல்லது அவல் புட்டு செய்து உண்பதற்கு பதிலாக சுலபமாக பீஸா வாங்கி சாப்பிட்டு விடலாம் என்று நினைக்கிறோம்.

ஆரோக்கியமாக வாழ நமது உணவுப் பழக்க வழக்கங்கள் மாற வேண்டும். அதோடு, தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உணவருந்தாமல் பசியோடும் இருக்காதீர்கள். தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீர் அருந்துங்கள். சரியான உணவை பசித்ததும் ருசித்து சாப்பிடுங்கள். ஆரோக்கியமாக, நிம்மதியாக வாழுங்கள்.

நட்புடன்,

**டாக்டர். வினோத்**
*அருணா கண் மருத்துவமனை, திருச்சி-21.*



விஷன் செய்திகள்

# இளையோரே! தலைமையேற்க வாருங்கள்



இரண்டு நாள் பயிற்சி








இந்தியாவை, உலகை வழிநடத்திய, வழிநடத்தும் மகத்தான தலைவர்கள் பலர் கிராமங்களில், வறுமையான குடும்பங்களில் பிறந்தவர்கள்தான். எந்த இளைஞர், இளம்பெண் தன்னுடைய திறமைகளை அறிந்து, அந்த திறமைகளை வளர்த்தெடுத்து, சமூகம் மேன்மை பெற்றிட பயன்படுத்துகின்றாரோ அவரே தலைவராக, தலைவியாக மாறுகின்றார். மகிழ்வான, வளமையான, வலிமையான மாற்றங்களுக்கு வித்திடுகின்றார்.

விஷன் நிறுவனம் 24 குக்கிராமங்களில் தலா 20 இளையோர்களைத் தேர்ந்தெடுத்து, தலைமை பண்புகளை ஊட்டி வளர்த்து வருகின்றது. இதுவரை 19 தலைப்புகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிகளை விஷன் நிறுவனம் தகுதியும், திறமையும், விருப்பமும்கொண்ட 24 கிராம ஊக்குநர்களுக்கு வழங்கி வருகின்றது. கிராம ஊக்குநர்கள் தாங்கள் பெற்ற பயிற்சியை இளையோருக்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் வழங்கி வருகின்றனர்.

கிராம ஊக்குநர்களுக்கான 4-வது கட்டப் பயிற்சி பிப்ரவரி 18-19 ஆகிய நாட்களில் திருக்கோவிலூரில் நடைபெற்றது. இப்பயிற்சியினை விஷன் நிறுவனத்தின் செயல் இயக்குனர் திரு. கிரேக் பியூ, அவரது குழுவினருடன் இணைந்து வழங்கினார். 20 கிராம ஊக்குநர்கள் இந்த இரு நாள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

1. **தன்னம்பிக்கை சிந்தனைகள்**
2. **சமூக அழுத்தங்கள் மேலாண்மை**
3. **கூட்டங்களில் பங்கேற்கும் திறமைகள்**
4. **நிர்வகித்தல்**
5. **செயல்பாடுகள் திட்டமிடுதல்**

ஆகிய தலைப்புகளில் பயிற்சியானது நடைபெற்றது.

இத்திட்டம் நடைமுறையில் உள்ள தமிழ்நாட்டின் ஆறு பள்ளிகளிலிருந்தும் தலா இரு ஆசிரியர்கள் பிப்ரவரி 5-ம் தேதி நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டமானது ஆசிரியர்களுக்கு ஓர் அருமையான பகிர்தல் தளத்தை அமைத்துக் கொடுத்தது. ஆசிரியர்கள் கையடக்க கணினி வழிக் கற்றுக் கொடுக்கும்போது தங்களுக்கு ஏற்பட்ட மகிழ்வான அனுபவங்களையும், சவால்களையும் பகிர்ந்த கொண்டனர். தொழில்நுட்பம் குறித்த பல்வேறு சந்தேகங்களுக்கு பதில்கள் காணப்பட்டது. இக்கூட்டத்தை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.




**விஷன் கையடக்கக் கணினி வழி கற்றல் ஆசிரியர்களுக்கான மீளாய்வு மற்றும் திட்டமிடுதல் கூட்டம்**



வீரத்திலிருந்து தான் பிற பண்புகள் பிறக்கின்றன ★ சர்ச்சில்





# உன்னை அறிந்தால் தலைவனாகலாம்

தொடர்கட்டுரை 1

தே. சைலட் மோனி

தன்னை அறிந்தவன் தலைவனாகிறான். யாரெல்லாம் தன்னுடைய பலங்களையும், பலவீனங்களையும் அறிந்து, பலங்களை வாய்ப்புகளாகவும், பலவீனங்களை பலங்களாகவும் மாற்றுகின்றார்களோ அவர்கள் தலைவர்கள் ஆகிறார்கள். உலகம் அவர்களை உற்றுப் பார்க்கின்றது.

மக்களை மாண்புடனும் மரியாதையுடனும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி வழிநடத்திய தலைவர்கள் நம் நெஞ்சங்களில் வாழ்கின்றார்கள்.

காந்தியைப்போல, காமராஜரைப் போல, ஆபிரகாம் லிங்கனைப் போல, சிறுமி மலாலாவைப் போல இளையோர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் நல்ல தலைவர்களாக மாற வேண்டும்.

நீ உன்னை அறிந்திட வேண்டும், உன் ஆற்றல்களைப் புரிந்திட வேண்டும், தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிட வேண்டும், புதிய எண்ணங்கள் மூலம் நாம் வாழும் சமூகம் அமைதியான சமூகமாக, ஆண்-பெண் பாகுபாடற்ற சமூகமாக, மனிதநேயமிக்க சமூகமாக, சாதி-மத-இன பேதமற்ற சமூகமாக, பொருளாதாரத்தில் மேம்பாடடைந்த சமூகமாக மாறிட உன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

நீ உன்னை அறிந்து கொண்டு, உன் திறமைகளை வளர்த்தெடுத்தால் மட்டுமே சமூக அர்ப்பணம் சாத்தியமாகும்.

தலைமைத்துவம் பற்றி சுருக்கமாக இக்கட்டுரையில் காண்போம்.

தலைவனாக சமூகப் பணி ஆற்றிட **வயது**, **பாலினம்**, **இனம்**, **சாதி**, **மொழி**, **பணம் போன்றவைகள் ஒருபோதும் தடையாக இருக்க முடியாது**.



**தலைவர்**
- பிறருக்கு வழிகாட்டுபவர்
- மற்றவர்களை இயக்குபவர்
- மற்றவர்களுக்காக பொறுப்பேற்பவர்

நீங்கள் ஒவ்வொருவரும்

**பிறரை**
- வழிநடத்த
- இயக்க
- மற்றவர்களுக்காக பொறுப்பேற்க

முடியுமெனில் நீங்களும் தலைவர்தான்.

*தலைவனாகும் முன்பு*
*உன்னை வளர்த்தெடு....*
*தலைவனான பின்பு*
*பிறரை வளர்த்தெடு...*

## நல்ல தலைவர்கள் தீய தலைவர்கள்

வழிநடத்துகின்ற எல்லா தலைவர்களும் நல்ல தலைவர்கள் அல்ல.

அழிவின் பாதையில் வழிநடத்துகிற தலைவர்களும் உண்டு. (உ-ம்) ஜெர்மனி – அடால்ப் ஹிட்லர், சைபீரியா – சார்லஸ் டெய்லர். உகாண்டா – இடிஅமீன், கம்போடியா – கமெர்ரோவக், யூகோஸ்லாவியா – மிவாசெவிக், பர்மா – நெவின், வடகொரியா – கிம்யூஸ் II போன்றோர்.



| | |
|---|---|
| அமைதியையும் (Peace)<br>வளர்ச்சியையும் (Development)<br>செழிப்பையும் (Prosperity)<br>மக்களின் தேவையையும் (Needs of People) | முன்னிறுத்தி மக்களை வழிநடத்துகிற நல்லத் தலைவர்கள் உள்ளனர் |

(உ-ம்) காந்தியடிகள் – இந்தியா
வாங்கரி மாத்தாய் – கீனியா
சான் சூகி – பர்மா
முகமது யூனஸ் – பங்களாதேஷ்
மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) – அமெரிக்கா
நெல்சன் மன்டேலா – தென் ஆப்பிரிக்கா

## நீயும் தலைவன்தான்

அதிகாரத்திலும், அரசுப் பதவியிலும் இருப்பவர்கள் மட்டும் தலைவர்கள் அல்ல.

நீயும் தலைவன் தான்.

**தலைவனாக உருவாவதை**

- வயது
- சாதி
- இடம்
- குடும்பம்
- படிப்பு
- பணம்
- மொழி



**ஆகியவை நிர்ணயிப்பதில்லை.**

பிறருடைய வாழ்க்கையில், நீ வாழும் கிராமத்தில், நீ படிக்கும் பள்ளியில் சிறிய மாற்றத்தை கொண்டு வர முடியுமென்றால் நீயும் தலைவன் தான்.

## தலைவன் / தலைவி என்பவர்....

***சில உதாரணங்கள்...***

- உன்னுடைய பள்ளிக்கூடத்தில் உடன்படிக்கும் மாணாக்கர் ஒருவனுக்கு தலைவலி. அவனிடம் பணமில்லை. நீ போய் மருந்து வாங்கிவந்து கொடுக்கின்றாய். உன்னுடைய பள்ளிக்கூடத்தில் முதல் மருத்துவப் பெட்டி (First Aid Box) இருப்பதை உறுதி செய்கின்றாய்– **என்றால் நீ தலைவன் / தலைவி.**
- உன்னுடன் படிக்கும் சில மாணாக்கர்களுக்கு கணிதம் / ஆங்கிலம் தெரியவில்லை. அவர்களை ஒருங்கிணைத்து (உன் நண்பர்களுடன் இணைந்து) அவர்களுக்கு கணிதம் / ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கின்றாய் – **என்றால் நீ தலைவன் / தலைவி.**
- உன்னுடைய கிராமத்தில் வனத்துறையினருடன் இணைந்து மரங்கள் நட்டு பேணிப் பாதுகாத்து வருகின்றாய்– **என்றால் நீ தலைவன் / தலைவி.**
- உங்களுடைய தெருவில் மின் விளக்குகள் இல்லை. இளையோர்கள் இணைந்து தீர்மானம் நிறைவேற்றி, பஞ்சாயத்து மூலமாக மின் வசதி கிடைக்க முயல்கிறீர்கள் – **நீ தலைவன் / தலைவி.**
- சாதிப் பார்க்கக் கூடாது, மதம் பார்க்கக் கூடாது. நீ சாதி, மதம் கடந்து நாம் வாழ வேண்டும் என்கிற பிடிவாதத்துடன் வாழும்போதும், அத்தகைய எண்ணங்களின் படி பிறரை வழிநடத்தும்போதும் – **நீ தலைவன் / தலைவி.**
- இயற்கை பேரிடர்களின் போது பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையை உணர்ந்து, உன்னால் முடிந்த சிறிய உதவிகளை செய்கின்றாய்– **என்றால் நீ தலைவன் / தலைவி.**
- நாம் வாழும் சமுதாயம் சமத்துவ சமுதாயமாக மாறிட கனவுகள் காண்கின்றாய், கனவுகளை நனவாக்க சிந்திக்கின்றாய், அச்சிந்தனைகளக்கு செயல்வடிவம் கொடுக்கின்றாய் –**என்றால் நீ தலைவன் / தலைவி.**

## நல்ல தலைமை

| எப்படி இருக்கவேண்டும் ? | எப்படி இருக்கக்கூடாது ? |
|---|---|
| பிறரை கலந்தாலோசித்து,<br>அனைவரையும் இணைத்து முடிவெடுத்து,<br>ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுபவராய் இருக்க வேண்டும். | எனக்கு எல்லாம் தெரியும்<br>நான் சொல்றேன், நீ கேளு<br>நீ பேசாதே, நான் பேசுகிறேன்<br>என்ற அடிப்படையில் இருக்கக்கூடாது. |

## ஏன் நல்ல தலைமைத்துவத்தை வளர்த்தெடுக்க வேண்டும்?

**மோசமான தலைமை**

↙ வளர்ச்சியை, ↙ அமைதியை, ↙ செழுமையைக் கெடுத்து, ↙ வறுமையையும், ↙ சண்டையையும், ↙ அழிவையும் ஏற்படுத்தும்.

**ஆகவே** ↗ வளர்ச்சியை, ↗ அமைதியை, ↗ செழுமையைக் நோக்கி தனி நபரையும், சமூகத்தையும் வழிநடத்துகிற

***நல்ல தலைமைத்துவம் தேவை...***
***நல்ல தலைவர்கள் தேவை...***
***வா...! தலைமையேற்க வா...!***



நன்றி: விஷன் தலைமைத்துவ புத்தகம்

தொடர்ந்து சந்திப்போம்...

# கல்வியில் தொழில்நுட்பம்











அறிவியலும் தொழில்நுட்பங்களும் பெருகிவரும் காலம் இது. இக்காலக்கட்டத்தில் கையடக்கத் தொலைபேசியை உபயோகிப்பது அதிகரித்து வருகின்றது. நாம் இது முற்றிலுமாக தவறு எனக் கூறிவிட முடியாது.

அதே நேரத்தில் மாணவர்கள் முன்பு வைக்கப்படும் மிகவும் முக்கியமான கேள்வி: மாணாக்கர்களின் சிந்தனை ஆற்றலை வளர்த்தெடுக்கவும், ஆராய்ந்து விடைத்தேடும் மனோபாவத்தை உருவாக்கவும், திறமைகளை வளர்த்தெடுக்கவும், ஆரோக்கியமான உறவுகளுக்கும் இன்றைய அறிவியலும் தொழில்நுட்பங்களும் எந்த அளவிற்கு உதவுகின்றது?என்பதுதான்.

உண்மை என்னவென்றால் அறிவையும் திறமைகளையும் வளர்த்தெடுப்பதற்கு உதவும் தொழில்நட்பங்கள் ஏழை மாணவர்களுக்கு எட்டாத கனியாகவே இன்றும் உள்ளது. கையடக்கத் தொலைபேசி உபயோகங்கள் பொழுதுபோக்குக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த இடைவெளியை குறைத்து, தொழில்நுட்ப உதவியுடன் ஏழை மாணவர்கள் கல்வி கற்றிட அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த விஷன் நிறுவனம் பல்வேறு முயற்சிகளை இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் மேற்கொண்டு வருகின்றது.

அதன் முதன்முயற்சியாக தமிழ்நாட்டில் ஆறு பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளில் கையடக்க கணினி **(Tablet Computer)** மூலம் அடிப்படை கணிதமும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ள வழிவகைச் செய்துள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் 20 கையடக்கக் கணினிகளையும், அடிப்படை கணிதமும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ள தேவையான பாடங்களையும் **(E-content)** வழங்கியுள்ளது.

இது மாணவர்கள் தாங்களாகவே அடிப்படை கணிதம் மற்றும் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள உதவுகின்றது.

இவ்வழி கற்றல் 2016 ஜனவரி முதல் நடைமுறையில் உள்ளது. இது மாணவர்களிடமும், அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களிடமும் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் நம்மை ஆச்சரியப்படவைக்கின்றது.

**ஆசிரியர்கள்**

- மாணவர்கள் விடுப்பு எடுப்பது மிகவும் குறைந்துள்ளது.
- **Tab** வகுப்பில் பங்கேற்க மாணாக்கர்கள் மிகவும் அழகாக உடை உடுத்தி வருகின்றனர். நேரம் தவறாமல் பள்ளிக்கு வருகின்றனர்.
- கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களும் மிகவும் எளிதாக கற்றுக் கொள்ள முடிகின்றது.
- மனநலம் குன்றிய மாணவர்களும் கற்றுக்கொள்ள மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர்.



**மாணவர்கள்**

- கற்றுக் கொள்வது மிகவும் உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளது.
- நிறைய விசயங்களை தெளிவாகவும் வேகமாகவும் கற்றுக்கொள்ள முடிகின்றது.
- நாங்கள் ஆங்கில வார்த்தைகளை உச்சரிப்பது செமுமையாகி வருகின்றது.



**கற்றல்தொழில்நுட்பங்கள்**
**ஏழைமாணவர்களுக்குவசப்படட்டும்...**
**கற்றல்மகிழ்வானதாகஅமையட்டும்...**

மேலும் விபரங்களுக்கு : **8940051900** என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்




## Help Line Numbers

**அவசர உதவிக்கு தொலைபேசி எண்கள்**

| | | |
|---|---|---|
| காவல் துறை | - | **100** |
| காவல் துறை (SMS) | - | **9500 99100** |
| போலீஸ் பற்றிய லஞ்சப் புகார் (SMS) | - | **98409 83832** |
| தீ மற்றும் மீட்புப் பணி | - | **101** |
| போக்குவரத்து காவல் | - | **103** |
| விபத்துகள் | - | **100, 103, 108** |
| போக்குவரத்து காவல் (SMS) | - | **98400 00103** |
| ஆம்புலன்ஸ் | - | **102, 108** |
| பெண்கள் உதவி | - | **109** |
| குழந்தைகள் உதவி | - | **1098** |
| தேசிய நெடுஞ்சாலையில் நெருக்கடி | - | **1033** |
| நெருக்கடி மற்றும் விபத்துகள் | - | **1099** |
| முதியோர் உதவி | - | **1253** |
| கடலோர உதவி | - | **1093** |
| இரத்தம் தேவை - உதவி | - | **1910** |
| கண் வங்கி உதவி | - | **1019** |
| இரயில்வே உதவி | - | **138** |

## விடுகதை



**மூளைக்கு வேலை...**

1. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி வாலினால் நீரை வற்றக் குடிக்குது?
2. அண்ணன் தம்பி இரண்டு பேர் அவர்களைச் சுற்றி பன்னிரண்டு பேர்.
3. அடித்து நொறுக்கி அணலில் போட்டால் ஆவியாகத் தோன்றி அழகாய் மணக்கும்.
4. அடிக் காட்டில், நடு மாட்டில், நுனி வீட்டில்.
5. அடியடா பிடியடா என்பான், அனால் அறையை விட்டு வெளியே வரமாட்டான்.
6. அண்ணனுக்கு எட்டாது, தம்பிக்கு எட்டும்.
7. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை.

**விடைகள்:** 7. திருஷ்டி பூசணி, 6. உதடு, 5. நாக்கு
4. நெய், 3. சாம்பிராணி,
2. கடிகாரம், 1. விளக்குத்திரி



## கிராம மாணவர்களுக்கான பேச்சு ஆங்கிலம் பயிற்சி

விஷன் நிறுவனமானது கிராமத்து இளையோர்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட பயிற்சிகளை வழங்கி வருகின்றது. விஷன் நிறுவனத்தின் பணியாளர் திரு. ஜோசப் அவர்கள் 24 கிராமங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு முதலில் பயிற்சிகளை வழங்குகின்றார். அவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு இப்பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.



ஜனவரி மாதம் 27, 28 ஆகிய தேதிகளில் கிராமத்து பணியாளர்களுக்கு இப்பயிற்சியானது வழங்கப்பட்டது.

இப்போது ஒவ்வொரு மாதமும் பேச்சு ஆங்கில பயிற்சியானது கிராமத்தின் பணியாளர்களுக்கு நடைபெற்று வருகின்றது.



## 10ம் வகுப்புக்கு பிறகு என்ன படிக்கலாம்?

ஒரு வழிகாட்டி

### +1

- Maths, Physics, Chemistry, Biology
- Maths, Physics, Chemistry, Computer Science
- Maths, Physics, Chemistry,Bio-Chemistry
- Physics, Chemistry, Botony, Zoology
- Maths, Economics, Commerce, Accountancy
- Business Maths, Economics, Commerce, Accountancy
- Economy, Commerce, Accounts, Computer Science

### Polytechnic

- Mechanical
- Civil
- EEE
- Chemical
- Computer
- Automobile
- Leather Technology
- Textile Designing

### Short term Para Medical

- Medical Lab Technology (CMLT)
- Medical X-ray Technology (CMXT)
- Operation Theatre Technology (COTT)
- Dialysis Technology (CDT)
- Nursing Care Assistant (CNCA)
- Radiology Assistant (CRA)
- Ophthalmatic Assistant (COPA)
- ECG Assistant (CEA)
- Blood Transfusion Assistant (CBTA)
- Dental Assistant (CDA)
- Newborn and Infant Care Assistant (CNIA)

### Govt Competitive Examinations

- TNPSC - Group IV
- VAO
- Indian Army Soldier Clerks Examination
- Indian Army Soldier - General Duty (NER)
- Indian Army Soldier - Technical (MER)
- Indian Army Soldier - Nursing Assistants (MER)
- Dock Yard Apprentices,Sailors, Artificer Apprentices
- Staff Selection Commission (SSC) Clerk Grade Examinations
- Railway Recruitment Board (RRB)

### ITI

- Fitter
- Mechnical
- Electrician
- Carpenter
- Draughtsman
- Electronic

### Computer Courses


- DTP
- Tally
- Graphics
- Data Entry
- Video Editing
- Animation Graphis

### Direct +2

- National Institute of Open Schooling (NIOS) Direct +2 (10th passed, after 2 years with science groups)
- Tamil Nadu Board of Secondary Eduction Direct +2 (10th passed, after 2 years with science groups)

*10-ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவச் செல்வங்களுக்கு "கனவு" இதழின் வாழ்த்துக்கள்*

# ஆபிரகாம் லிங்கன்



## இளமை

1809ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆபிரகாம் லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன் ஒரு தச்சர். சிறுவனாக இருந்தபோது, தந்தையின் பணிகளில் லிங்கன் உதவி புரிந்தார். தாயார் நான்சி ஹாங்க்ஸ் (Nancy Hanks). காடுகளுக்கிடையே ஒன்பது மைல் நடந்து சென்று கல்வி பயின்றார் லிங்கன். ஆபிரகாம் லிங்கனுக்கு 9 வயது இருக்கும்போது தாய் இறந்து போனதால், சிற்றன்னையால் லிங்கன் வளர்க்கப்பட்டார். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. **பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந்தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல், கதை சொல்லுதல், வேடிக்கையாகப் பேசுதல்** ஆகிய லிங்கனின் குணங்கள் அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ள செய்தன.

## மாற்றத்திற்கான முதல் அனுபவம்

ஒருமுறை நியூ ஆர்லியன்ஸ் என்ற நகரத்திலுள்ள சந்தைக்கு லிங்கன் சென்றிருந்தார். அங்கே ஒரு நீக்ரோ பெண் அடிமையாக விற்கப்படுவதைக் கண்டார். அடிமைகள் என்ற பெயரில் கறுப்பினத்தவர்கள் விற்கப்படுவதையும் இரும்பு கம்பிகளால் கட்டப்பட்டிருப்பதையும், சாட்டையால் அடிக்கப்படுவதையும் ஒட்டு மொத்தமாகக் கொடுமைப்படுத்தப்படுவதையும் கண்டார். அவர் மனம் துடித்தது. இந்தக் கொடுமைக்கு முடிவு காணவேண்டும் என்று லிங்கன் விரும்பினார். அதற்கான வழிமுறைகளைக் கண்டறிய முற்பட்டார்.

தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆபிரகாம் லிங்கன் பிளாக் காக் (Black hawk war) போரில் கலந்து தலைவனாக பணியாற்றியது அவருக்கு புதியதோர் பாதையைக் காட்டியது.

1833-ல் ஆண்ட் ரூத்லெஸ் என்ற பெண்ணைக் காதலித்து மணந்து கொண்டார். ஆனால் இரண்டே ஆண்டுகளில் ஆண்ட் நோய்வாய்ப்பட்டு இறந்தார். 7 ஆண்டுகள் கழித்து லிங்கன் தனது 33 வயதில் (1842) மேரி டாட் (Mary Todd) எனும் பெண்ணை மணந்தார். அவருக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன.

## பணிகள்

தனது 22ஆவது வயதில் ஓர் அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலைக்கு சேர்ந்தார். பின்னர் கடனுக்கு ஒரு கடையை வாங்கி வியாபாரத்தில் ஈடுபட்டார். ஆனால் தோற்றுப் போனார். அடுத்து ஓர் அஞ்சலகத்தில் அஞ்சல்காரராகப் பணியாற்றினார். அதன்பிறகு அவர் தாமாகவே படித்து வழக்குரைஞர் ஆனார்.

## அரசியல்

அரசியலில் ஈடுபடுவதன் மூலமே அடிமைத்தனத்தை ஒழிக்க முடியும் என்ற முடிவுக்கு லிங்கன் வந்திருந்தார். 1834ஆம் ஆண்டு தமது 25வது வயதில் முதன் முதலாக இலினோய் மாநில சட்டமன்றப் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பொது மக்களிடம் அவர் செய்த பிரச்சாரம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. அடுத்து அமெரிக்க செனட்டுக்கு தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் மிகப் பிரபலமான நீதிபதி ஒருவர் போட்டியிட்டார். அந்த நீதிபதியை லிங்கன் எதிர்த்து நின்றார். இந்தத் தேர்தலின் வெற்றியை அமெரிக்க மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

அமெரிக்க தேசத்தின் வரலாறு, அமெரிக்க அரசியல், அன்றைய அமெரிக்காவின் நிலைமை, பல்லாயிரம் நீக்ரோக்களை அடிமையாக நடத்தும் வழக்கம், வெள்ளையர்-கறுப்பர் என்ற பாகுபாடு, தேசத்தை சீரழிக்கும் சூழ்நிலை ஆகியவற்றை எல்லாம் தமது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் லிங்கன் குறிப்பிட்டார். லிங்கனின் இந்த அணுகுமுறை அமெரிக்க மக்களிடத்தில் எழுச்சியை உண்டாக்கியது. தேர்தல் முடிவு லிங்கனுக்கு சாதகமாக அமைந்தது. முதன் முதலாக லிங்கன் அமெரிக்க செனட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## அடிமை முறை ஒழிப்பு

பதவியேற்ற இரண்டே ஆண்டுகளில் அதாவது 1862-ல் அவர் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்படுவர். அதன்பின் அமெரிக்காவில் அடிமைத்தனம் இருக்கக் கூடாது என்று பிரகடனம் செய்தார்.

## மக்களாட்சி விளக்கம்

1863-ல் லிங்கன் ஆற்றிய கெட்டிச்பெர்க் பேருரையில் மக்களுக்காக அரசாங்கம், மக்களுடைய அரசாங்கம், மக்களால் ஆளப்படும் அரசாங்கம் என்னும் வாக்குமொழிகள் அழிந்து போகாது என்று குறிப்பிட்டார்.

**மக்களால், மக்களுக்காக**
**நடத்தப்படுவதே மக்களாட்சி**

என்பது ஆபிரகாம் லிங்கனின் மிகப் புகழ்பெற்ற மக்களாட்சி குறித்த விளக்கம் ஆகும்.

1864ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் 4 வாக்குகள் மிகையாகப் பெற்று இரண்டாம் தடவையாக ஜனாதிபதியாக லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இறப்பு


1865ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி பெரிய வெள்ளிக்கிழமை அன்று தனது மனைவியுடன் அவர் அமெரிக்கன் கசின் என்ற நாடகம் பார்க்கச் சென்றிருந்தார் லிங்கன். அவர் நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தபோது ஜான் வில்ஸ் பூத் என்ற ஒரு நடிகன் அதிபர் லிங்கனை குறிவைத்து சுட்டான். மறுநாள் காலை 56 வயதான லிங்கனின் உயிர் பிரிந்தது. பிரிந்து போன வட தென் அமெரிக்க மாநிலங்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தன. தென்பகுதி அமெரிக்க அடிமை கறுப்பருக்கு எல்லாம் விடுதலை கிடைத்தது. ஆனால் வரலாற்று முக்கியத்துவம் உள்ள அந்த மகிழ்ச்சிகரமான வெற்றியைக் கண்டுகளிக்க அவற்றின் ஆக்க மேதையான ஆபிரகாம் லிங்கன் அப்போது உயிரோடு இல்லை.

**அவர் அமெரிக்க மக்களால் அவர் ஒரு தேசியத் தியாகி என மரியாதை செய்யப்படுகிறார்.** அடிமைத்தனத்தை ஒழிக்கப் போராடியதால் மக்களால் அவர் ஒரு சிறந்த சுதந்திரப் போராளியாக வணங்கப்படுகிறார்.

*நன்றி:* **விக்கிபீடியா**

## விளையாடுங்கள்

# S P A C E



**ACROSS**

1. ____ the dog was the first living being to go into outer space. (5)
3. India has a launchpad at ____.
7. The United States of America and the ____ were the two countries involved in what is called the Space Race. (11)
9. A space ____ is a reusable launcher, which carries astronauts and equipment into outer space.
10. ____ was the first man to set foot on the moon. (13)

**DOWN**

2. ISRO stands for ___ Space Research Organisation. (6)
3. This is the only American space station. (6)
4. Mir is an ___ space station. (12)
5. In 1966, Luna9 became the first craft to successfully land on the ___. (4)
6. The ____ telescope is used to capture images of faraway galaxies. (6)
8. The Galileo probe was launched to explore the atmosphere of ___ . (7)

## பொது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்

# பெண்களே இயக்கிய சர்வதேச விமானம்

**2016**
**சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு**
**AIR INDIA நிறுவனம்**
**பெண்களைக் கொண்டே டெல்லியிலிருந்து**
**அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவிற்கு**
**போயிங் 777 விமானத்தை இயக்கியுள்ளது.**



பெண்களால் முடியாது, அவர்கள் உடல் வலிமை குன்றியவர்கள், அவர்களுக்கு எப்போதும் பாதுகாப்பு தேவை. பல வேலைகளை பெண்களால் செய்ய இயலாது போன்றவை எல்லாம் ஆணாதிக்க சிந்தனையின் எச்சங்கள்.

**வாய்ப்பும், கல்வியும், அனுபவமும் இருந்தால் ஆண் என்றாலும், பெண் என்றாலும் சாதிக்க முடியும்** என நிரூபித்துக் காட்டியுள்ளார்கள் இந்தியப் பெண்கள்.


*முடியும் பெண்ணே*
*உன்னால் முடியும்!*
*பெண் என்று*
*உன்னையே நீ*
*ஒதுக்கிவிடாதே!*
*வாய்ப்புகளைத் தேடு!*
*வாழ்க்கை வசப்படும்!*

**கேப்டன் பஸ்மட்டா பாஜ்பாயி** (Captain Kshmta Bajpayee) மற்றும் **கேப்டன் குபசங்கி சிங்** (Captain Shubhanji Singh) ஆகிய பெண் விமானிகள் ஏர்-இந்தியாவின் போயிங் விமானத்தை 14,500 கி.மீ. (9,000 மைல்) தொலைவு இயக்கி சாதனை படைத்துள்ளனர்.


விமான நிலையத்தில் விமான இயக்கத்தை கண்காணித்தவர்கள் தொடங்கி, விமானத்தில் இருந்த டாக்டர், பொறியியல் வல்லுநர், பணி புரிந்தவர்கள், விமானத்தை இயக்கியவர்கள் என அத்தனை பேரும் பெண்கள்.

> "*Behind* every SUCCESSFUL man there are l lot of UNSUCCESSFUL years."

21ம் பக்க விளையாட்டு போட்டியின் விடைகள்




**S.B. Stelshon Moni**
II-E
Alpha Wisdom Vidhyashram



மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

ஏப்ரல் 2016

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 3



விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் சார்பாக வெளியிடுபவர்
ஆசிரியர்:
**தே. சைலட் மோனி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி - 620 021, தமிழ்நாடு

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் சார்பாக அச்சிடுபவர்:
ஜி.எம். செந்தில் பேப்பர் மார்ட் கடலூர்
வரைகலை:
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்



தலைமை ஆலோசகர் மற்றும் ஆசிரியர்:
**கிரேக் பியு**
உதவி பொறுப்பாசிரியர்:
**I. ஜோசப் சகாயராஜ்**
ஆசிரியர்கள்:
**அப்டகீர்**
**சுந்தர். G.**
**S. சுபா**
**K. சுரேஷ் கண்ணா**
**C. ராஜாமணி**
**A. செல்வநாதன்**
**C. ஏழுமலை**
**M. கென்னடி ஜோன்ஸ்சேகர்**
**வசந்தி. B.**
**S. ஆதியா**
**P. சுரேஷ்**
**S. டெய்சி டயானா**
**S. அருளரசி**


## உள்ளே ...


3 ஆசிரியர் கடிதம்
விளையாட்டில் ஆர்வமா? 5
7 பழமொழிகள் பத்து
தும்பைப்பட்டி தூயவன் - கக்கன் 8
9 பாராட்டுவோம்
இயற்கை பேரிடர்களிலிருந்து கற்போம், கற்பிப்போம் 10
13 உணவே மருந்து
விஷன் செய்திகள் - தலைமையேற்க வாருங்கள் 14
15 உன்னை அறிந்தால் தலைவனாகலாம்
கல்வியில் தொழில்நுட்பம் 17
18 விடுகதை
அவசர உதவி தொலைபேசி எண்கள் 18
19 10ம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம்?
ஆபிரகாம் லிங்கன் 20
21 விளையாடுங்கள்
பெண்களே இயக்கிய விமானம் 22



**நன்கொடைகள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 4000/- |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 5000/- |
| பின் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 3000/- |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 2000/- |
| உள் அரை பக்கம் (ஒரு கலர்) | ரூ. 1000/- |



இவ்விதழின் கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கனவு இதழின் நிர்வாகம் பொறுப்பல்ல.

படைப்புகளை பிரதி எடுத்துவைத்துக் கொண்டு எங்களுக்கு அனுப்பவும்.


இளையோர்களே கனவு இதழில் வெளியாகும் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை வென்றிடுங்கள்.

உங்களின் படைப்புகளை கனவு இதழ் ஆசிரியரின் முகவரிக்கு உங்களின் பெயர், வயது, பாலினம், விலாசம், புகைப்படம் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

உங்கள் கிராமத்தில் நடைபெறும் "**ஆகா**" நிகழ்வுகளை எங்களுடன்


சந்தா, விளம்பரம், படைப்புகள் மற்றும் வாசகர்களின் கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்





# கனவு இதழின் ஆசிரியர்கள் கூட்டம்






கனவு இதழின் முதல் ஆசிரியர்கள் கூட்டம் விஷன் இந்தியா, திருச்சி அலுவலகத்தில் பிப்ரவரி 21-ம் தேதி நடைபெற்றது. அதன் ஆசிரியர்கள் சைலட் மோனி, ஏழுமலை, கென்னடி, ராஜாமணி, செல்வநாதன், சுபா, சுரேஷ் கண்ணா மற்றும் கிரேக் பியு, சியாமளா, சாலி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் பத்திரிக்கையின் தரம் உயர்த்துவது, எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.



# மாலைநேர வகுப்புகள்



விஷன் நிறுவனமானது ஆ.லு.தி. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 24 மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகின்றது. இந்த வகுப்புகளின் மூலம் சுமார் 800 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

- ★ **வீட்டில் படிப்பதற்கான இடவசதி, மின்சாரம் இல்லாமை**
- ★ **பெற்றோர்களால் பாடங்கள் குறித்த சந்தேகங்களுக்கு பதில் கூறிட முடியாத நிலை**
- ★ **பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளைச் செய்திட நிர்பந்தித்தல்**
- ★ **பெற்றோர்களுக்கிடையே ஒற்றுமையற்ற நிலை அல்லது குடும்பத் தகராறு**
- ★ **உறவினர்கள், நண்பர்கள் வீட்டுக்கு வந்து விவாதங்களில் அல்லது அரட்டைகளில் ஈடுபடுதல்**

போன்ற பிரச்சனைகளிலிருந்து மாணவர்களை விடுவித்து, அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக இம்மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வகுப்புகள் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.



